# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 43/2021 நாள்.09.04.2026

### DW4- திருமதி.ஜீவிதா, க/பெ. திரு.சிவக்குமார்

வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் MBA படித்துள்ளேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றுகிறேன். தற்போது 33 வயது என்றால் ஆமாம். 2003இல் எனக்கு 13 வயது என்றால் ஆமாம். 2003ஆம் ஆண்டில் அவ்வாறு கொடுத்தபோது என்ன நோட்டுகளாக கொடுத்தார்கள் என்றால் 500ரூபாயாக கொடுத்தார். எத்தனை நோட்டுகள் என்றால் 800. 2003இல் நான் எந்த பள்ளியில் என்ன படித்தேன் என்றால் தூய திருஇருதய மகளிர் மேல்நிலை பள்ளியில் 11வது அல்லது 12வது படித்தேன். எந்த தேதி என்ன மாதம் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல தெரியும் என்று சொல்லிவிட்டு பின்பு சாட்சி தேதி தெரியவில்லை என்று சொல்கிறார். என்ன கிழமை என்றால் தெரியாது. 2003இல் எனக்கு 13வயதில் நடந்த விபரங்கள் தெரியாது என்றும், பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.09 13:58:35 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.